பெற்று அதன்மூலம் 25 இலட்சத்திலிருந்து 1 கோடி ரூபாய் வரை தொழில் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்து தரப்படும். அது மட்டுமல்ல, இதில் 50 சதவிகிதம் மகளிர், பட்டியல் இனத்தவரும் உண்டு, மாற்றுத் திறனாளிகளுக்கும் சலுகைகள் உண்டு என்பதைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் நாளை (10—5—2012) தங்களது பதிலுரையை வழங்குவார்கள்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 10—5—2012 (வியாழக்கிழமை) காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2—48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

— ஏதுமில்லை —

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

246. மானியக் கோரிக்கை எண் 44—குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012—2013. (தமிழ், ஆங்கிலம்)

247. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய செயலாக்கத் திட்டம், 2012—2013. (தமிழ், ஆங்கிலம்)

248. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை பற்றிய மக்கள் சாசனம் 2012—2013. (தமிழ், ஆங்கிலம்)

249. மானியக் கோரிக்கை எண் 9—பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012—2013. (தமிழ், ஆங்கிலம்)